# காரை நலன்புரிச்சங்கம் (பிரித்தானியா)

# KARAI WELFARE SOCIETY (UK)

Registered Charity No: 1126413

ISSUE 3 NEWS LETTER July 2013


## எமது சங்கத்தின் பிதாமகன் சபா அண்ணாவை நினைவு கூருவோம்



எமது சங்கத்தின் மூத்த ஸ்தாபகர்களில் ஒருவரும் இற்றைக்கு 23 வருட காலம் தலைவராக, செயலாளராக, நிர்வாகசபை உறுப்பினராக இறுதிக் காலகட்டத்தில் ஒரு உறுப்பினராக இருந்து, எந்த நேரத்திலும் மனம் கோணாமல் சங்கத்தின் வளர்ச்சியில் மட்டுமே கண்ணாக இருந்து அனைத்துக்கால நிர்வாகத்திற்கும் ஒரு நல்ல வழிகாட்டியாக தாய்மை உணர்வோடு ஆத்மார்த்தமாக தனது இறுதி மூச்சுவரை சங்கத்தை நல்வழியில் இட்டு வந்த எங்கள் பிதாமகன் கலாநிதி சபாபதி சபாரட்ணம் அவர்களின் இழப்பு எமக்கு ஓர் பேரிழப்பாகும்.

இவர் தனது இறுதி நாள்வரை காரைநகரின் வளர்ச்சிக்காக உள்ளன்போடு செயற்பட்டவர். மிக இளகிய மனங்கொண்ட இவர், கடந்த 23 வருட காலங்களில் தனிப்பட்ட முறையில் தான் வழங்கிய நிதியுதவிகளைக்கூட தன் பெயரில்லாது "ஓர் அன்பர்" என்றே குறிப்பிடுவார். விளம்பரத்தை ஒரு போதும் எதிர்பார்க்காத எங்கள் காரைக் கர்ணன் இவர். எங்கள் அனைவர்க்கும் அடிக்கடி கூறி வந்த வசனம் "எங்களுக்கு சிலுசிலுப்புத் தேவை இல்லை, பலகாரம் தான் தேவை"

எமது பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தை தனது இறுதி மூச்சுவரை கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் செவ்வனே நெறிப்படுத்திய எங்கள் பிதாமகனை என்றென்றும் நினைவு கூர நாம் கடமைப்பட்டுள்ளோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்
உய்வு இல்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

## காரை அபிவிருத்தி சபை நூலகம்

நூலக கட்டிடத்தின் 1ம் மாடிக்கான (100- 35அடி) கொங்கிறீற் வேலைகள் முடிவுற்றுள்ளது. அத்துடன் முன்மதில், முன்கேற் கிழக்கு பக்க கம்பி வேலி



வேலைகளும் முடிவுற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து வலது பக்க மண்டபத்தின் யன்னல், கதவு வேலைகளும் உள்பூச்சு மற்றும் அலுவலக அறை அமைக்கும் வேலைகளும் மேற்கொள்ளப்பட உள்ளது. இவ்வேலைகள் முடிவுற்றதும் நூலகத்தின் 1ம் கட்டிடத்தை வைபவ ரீதியாக இவ்வருட இறுதிக்குள் திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது .

அதனைத் தொடர்ந்து நூலக தளபாடங்கள் மற்றும் நூல் சேகரிப்பு என்பனவற்றை மேற்கொண்டு நூலக செயற்பாட்டை; படிப்படியாக ஆரம்பித்து சேவையில் கொண்டு வருவதென உத்தேசிக்கப் பட்டுள்ளது.

நூலக தளபாடங்கள் செய்வதற்கென ரூபாய் 200,000.00 (£1000.00) எமது பிரித்தானியா காரை நலன்புரிச்சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக வேலைகளுக்கு நிதி சேகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அத்துடன் ஏற்கனவே நிதி அன்பளிப்பிற்கு உறுதியளித்த அன்பர்கள் தங்கள் பங்களிப்பை கூடிய விரைவில் தந்து உதவுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள் .

## குடிநீர் விநியோகமும் எதிர்காலத் திட்டங்களும்

பிரித்தானியா வாழ் காரை மக்களின் நிதியுதவியோடு 2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை இக் குடிதண்ணீர் விநியோகம் ஏகோபித்த காரைவாழ் மக்களின் குடிநீர் குறைபாட்டை தீர்த்து வந்து கொண்டிருகின்றது. மேலும் இச்சேவையில் காரை பிரதேச சபையினரினதும் , மற்றும் கடந்த மாதம் முதல் தோப்புக்காடு கிராமிய முன்னேற்ற சங்கமும் ஈடுபட்டு வருகின்றது.




குடி தண்ணீர் தட்டுப்பாடு பொதுவாக கோடை காலங்களில் பெரும் பிரச்சனையாக இருந்து வந்திருக்கின்றது மட்டுமன்றி தொடர்ந்தும் வருகின்றது. காரை அபிவிருத்தி சபை இக் குறைபாடுகளை முடிந்தளவு நிறைவேற்றுவதற்காக பெரிதும் போராடி வருகின்றார்கள்.

மேற்படி இச்சேவை விநியோகம் பற்றிய தினசரி பாதை ஒழுங்கு முறைகள் (Routine Schedule) மக்களுக்கு எழுத்து மூலம் வழங்கப்பட்டிருந்தாலும் சில சமயங்களில் இவ் அட்டவணை பின்பற்ற முடியாமலும் அத்துடன் சிறுசிறு விநியோக தவறுகளும் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே வந்து கொண்டிருக்கின்றது.

இதற்கு ஒட்டுமொத்தமாக நிர்வாகத்தினரை நாம் தொடர்ந்தும் குறை கூற முடியாது, மக்களின் ஒத்துழைப்பின்மையும் இக்குறைபாட்டில் பெரும் பங்கு வகிக்கின்றது.

தற்பொழுது தண்ணீர் எடுக்கும் இரண்டு நன்னீர் கிணறுகளும் சண்டிலிப்பாய் பிரதேசத்துக்குள் அடங்கியுள்ளன. இக்கிணறுகளில் மெள்ளப்படும் நீர் குடிநீருக்கு உகந்ததா என்று சுகாதாரமுறைப்படி பரிசோதிக்கப்பட்டு, அப்பகுதி பிரதேசசபையினரினது அனுமதியுடன் எம்மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது, மேலும் ஒரு கிணறு விளான் பகுதியில் கொள்வனவு செய்வதற்கு காரை நிர்வாகசபை முயற்சி எடுத்து வருகின்றது.

இக் குடிநீர் விநியோகத்திற்கு தற்பொழுது ஏழுபேர் கொண்ட அபிவிருத்தி சபையின் சேவையாளர்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்களில் மூன்று சாரதிகள், மூன்று உதவியாளர்கள் மற்றும் ஒருமேற்பார்வையாளர் அடங்குவர்.

தற்பொழுது தண்ணீர் முதல் 200 லீட்டர்களுக்கு 60 சதவிகிதப்படியும், அதற்கு மேல் எடுப்பவர்களுக்கு ஒரு ரூபாய் விகிதப்படியும் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பாடசாலைகள், வைத்தியசாலை, அன்னதான மடங்கள், தண்ணீர் பந்தல் ஆகியவற்றிற்கு 60 சத விகிதத்திற்கும் வழங்கப்பட்டு வருகின்றது, இவற்றில் இருந்து வரும் வருமானம் ஊழியர் சம்பளம், வாகன திருத்த வேலைகள், வாகன எரிபொருள், மற்றும் பராமரிப்புக்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன, இந்த ஆண்டு மட்டும் இரு தண்ணீர் தாங்கிகளின் திருத்த வேலைகள் ரூபாய் 5 இலட்சத்திற்கும் மேலாகும்.

எமது பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கமும், காரை அபிவிருத்தி சபையும் இணைந்து இக்குடி நீர் குறைபாட்டை ஓர் அளவனும் நிவர்த்தி செய்யும் வகையில் நீண்ட எதிர்கால திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இதன் முதல் கட்டமாக புதிய குளம் ஒன்று வெட்டுவதற்கு காணி ஒன்று களபூமியில் கொள்வனவு செய்து வழங்கப்பட்டது, இதன் மூலம் இப்பகுதியில் ஓடும் மழை நீர் இக்குளத்தில் சேமிக்கப்பட்டு வருகின்றது. இதனால் எதிர்வரும் காலங்களில் இக்குளத்தை அண்டியுள்ள பிரதேசங்களின் கிணறுகளின் உவர்ப்புத் தன்மை குறைந்து நன்னீராக வாய்ப்புண்டு.

அத்துடன் எமது சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள கந்தர்குண்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது, மேலும் இனிவரும் காலங்களில் பொது இடங்களில் உதாரணமாக வைத்தியசாலை, பாடசாலைகள், கோவில்கள் ஆகியவற்றின் கூரைகளில் இருந்து வழிந்தோடும் மழை நீரை கிணறுகளில் அல்லது நீர்த்தாங்கிகளில் எவ்வாறு சேமிப்பது என்பது பற்றியும், அத்துடன் கைவிடப்பட்ட பொது நன்னீர் கிணறுகள், குளங்கள் மீள்புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்பட உள்ளது. இப்படியான நீண்டகால செயல்திட்டங்களுக்கு பணம் மாத்திரம் மட்டுமல்லாது வெளிநாடுகளில் வாழும் நம்ஊர் புத்திஜீவிகளின் ஆலோசனைகள், மற்றும் செயல் படுத்தப்படக்கூடிய செயல்திட்டங்கள் வரவேற்கப் படுகின்றன.

# சுகாதார மேம்படுத்தல்

## மூன்றாம் கட்ட கண்படர் அகற்றல் சிகிச்சை நிறைவுற்றது

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கதின் மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 28/02/2013 அன்று, மூன்றாம் கட்டமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 13 பேர்களுக்கு கண்படர் அகற்றல் சிகிச்சை மூளாய் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டது.



இம் மூன்றாம் கட்ட இலவச கண்படர் அகற்றல் சிகிச்சைக்கு சுமார் 23 பேர்கள் வரையில் காரை

அபிவிருத்தி சபை அலுவலகத்தில் பதிவு செய்திருந்தனர். இவர்களில் 13 பேர்கள் மட்டுமே உடனடி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று மருத்துவ சான்றிதழ் வழங்கப்படு அடுத்த வாரமே இந்த சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 6 பேர்களுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சிகிச்சைகளுக்கான உதவித் தொகையாக ரூபாய் 260,000 பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தினரால் வழங்கப்படுள்ளது.

கடந்த வருடங்களில் முதல் தடவையாக 17 பேர்களுக்கும், இரண்டாம் தடவையாக 15 பேர்களுக்கும் இவ் கண்படர் அகற்றல் சிகிச்சை எமது சங்கத்தால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இச் சிகிச்சையை திறம்பட ஒழுங்கமைத்து நடாத்தி முடித்த எமது காரை அபிவிருத்தி சபை நிர்வாக உறுப்பினர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## சுகவாழ்வு
## இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

காரைநகரில் சுகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இலவச மருத்துவப் பரிசோதனை முகாமொன்று காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலை அதிகாரிகள், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைப் பிரிவும் காரைநகர் அபிவிருத்திச்சபையும் இணைந்து இந்த இலவச மருத்துவ பரிசோதனை முகாமை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த இலவச மருத்துவ பரிசோதனை நிகழ்வில் உயர் இரத்த அழுத்தம், சலரோகம், காசநோய், புற்றுநோய் கண்டறிதல் பரிசோதனை, சக வயதினர்களுக்கான பரிசோதனைகள், போசாக்கு குறைவு தொடர்பான பரிசோதனைகள் போன்ற பலநோய்கள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி மருத்துவ முகாம் அண்மையில் இலண்டனில் அமரரான காரை நலன்புரிச்சங்கத்தின் முக்கிய ஸ்தாபர்களின் ஒருவரும் சங்கத்தின் கடந்த கால தலைவரும் சங்கத்தின் கடந்த 23வருட கால வளர்ச்சியில் தனது இறுதி மூச்சுவரை அயராது உழைத்தவருமான டாக்டர் சபாபதி சபாரட்ணம் அவர்களின் ஞாபகார்த்தமாக சங்கத்தின் அனுசரனையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் நடாத்தப்பட்டது.

## வலந்தலை வைத்தியசாலை நோயாளிகள் தங்குமிடம் திருத்த வேலைகள்

முன்னைய வைத்திய அதிகாரி Dr. SHAFRAZ MAJUMUDEEN, மற்றும் தற்போதைய வைத்திய அதிகாரி Dr. சுவாமிநாதன் அவர்களின் வேண்டுகோளுக்கும் இணங்க, நோயாளிகளின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு வைத்தியசாலையின் ஆண், பெண் நோயாளிகள் தங்கும் அறை நிலம் திருத்தி அதற்கு Ceramics Tiles பதிக்கப்பட உள்ளது. அரசாங்க உதவியில் உடனடியாக ஈடு செய்யப்படாத வேலைத் திட்டத்தில் இதுவும் ஒன்று.

இதற்கான செலவிற்காக ரூபாய் 800,000.00. (8 இலட்சம்) எமது நலன்புரிச் சங்கத்தால் ஒதுக்கப் பட்டுள்ளது.

பெரும்பாலான கிராமிய வைத்தியசாலைக் கட்டிடங்கள் தனி நபர்கள், மற்றும் எம் போன்ற பொது நல சபைகள், மன்றங்களினால் தான் புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## யோகாசனப் பயிற்சி ஆச்சிரமம்
## ''ஓம் கிரியா பாபாஜி யோகா ஆரண்யம்''

களபூமி ஆலடியில் பன்முகப்படுத்தப்பட்ட ஆன்மீகம், மனிதநேயம் , நற்சமூக சிந்தனை நோக்கத்துடன் இவ் வருட ஆரம்பத்தில் இந்த "ஓம் கிரியா பாபாஜி ஆரண்யம் " உயர்திரு ஆறுமுகம் ஐயா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. எமது ஊரை சேர்ந்த இவர் எமது ஊர் மக்கள் நன்மை கருதி இதனை ஆரம்பித்தார். இதற்கு உறுதுணையாக திருமதி கிருஷ்ணபிள்ளை அவர்கள் இந்த இடத்தை அன்பளிப்பாக கொடுத்து உதவினார்.



இலங்கையில் 5வது கிளையாக இவ் ஆச்சிரமம் அமைகின்றது. இதனது தலைமையகம் கொழும்பு வெள்ளவத்தையில் பல வருடங்களாக செம்மனே 300இக்கும் மேற்பட்ட தினசரி யோகா பயிற்சி ஆளர்களுடன் அரசாங்க அனுமதி பெற்று இயங்கி வருகின்றது.

எமது ஊரில் 5வது கிளையாக ஆரம்பிக்கப்பட்ட இந்த யோகா ஆரண்யம் , விசேடமாக சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சிறுவர் முதல் பெரியோர் வரை, இளைஞர் முதல் யுவதி வரை பாகுபாடின்றி இலவசமாக யோகா பயிற்சிகள் ஆன்மீக சொற் பொழிவுகள் என்பன நடைபெற்று வருகின்றன. பின்னர் அன்னதானமும் வழங்கப்படுகின்றது.

மேற்படி ஆச்சிரமம் எமது சங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, தண்ணீர் தாங்கி அமைப்பதற்கும், தண்ணீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump) மற்றும் குழாய் நீர் விநியோகத்திற்காக ரூபாய் 100,000.00 வழங்கப்பட்டது.

இவ்வாறான யோகா அமைப்புகள் ஊடாக நல்லதொரு ஆரோக்கியமான, அமைதியான, சமச்சீரான எதிர்கால சமுதாயத்தை உருவாக்கலாம் என நாம் நம்புகிறோம்.

## கல்வி மேம்படுத்தல்

பிரித்தானிய காரை நலன் புரிச்சங்கத்தின் பிரதான நோக்கங்களில் முக்கியமானதான கல்வி மேம்படுத்தல் எனும் திட்டத்தின் கீழ், அனைத்து கல்லூரிகள், பாடசாலைகள் யாவும் பாகுபாடுகள், பாரபட்சம் அன்றி அவர்களுக்கு உதவி ஊக்குவிக்க வேண்டும் என்பது எமது கருத்து.

### யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திற்கு ஒரு மில்லியன் (1,000,000.00) ரூபாய்கள் நிரந்தர வைப்பில்

மேற்படி கல்லூரியின் 125வது ஆண்டு விழாவின் நிதி சேகரிப்புடனும், எமது பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் நிதி உதவியுடனும் ஒரு மில்லியன் (பத்து இலட்சம்) ரூபாய்கள் சேமிப்பு வங்கி நிரந்தர சேமிப்பு கணக்கில் இடப்படவுள்ளது. இதில் இருந்து வரும் மாதாந்த வட்டி வருமானத்தை கொண்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும், மற்றும் மாணவர்களை கோட்ட கல்வி, மாகாண, தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் (கல்வித் திணைக்களத்தால் உதவி பெற முடியாத சேவைகள்) இப்பணம் உதவி புரியும்.

இத்துடன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, பாடசாலையின் அவசர வேலைகளுக்கென ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி இவ்வருட முற்பகுதியில் வழங்கப்பட்டு காரை அபிவிருத்தி சபையின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது.

### யா/யாழ்ற்ரன் கல்லூரி முன்னேற்றப் பாதையில்

மேற்படி கல்லூரியில் தரம் ஆறு தொடக்கம் தரம் 10 வரையான வகுப்புகளுக்கு மாலை நேர விசேட கணணி மற்றும் ஆங்கில வகுப்புகள் நடைபெற்று வருகின்றது. இவ் விசேட வகுப்புக்கள் மூலம் சுமார் 100கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பெரும் பயனடைந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வகுப்புகளுக்கான ஆசிரியர்கள் கொடுப்பனவுகளை எமது பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கமும், கனடா காரை கலாச்சார மன்றமும் இணைந்து நிதியுதவி வழங்கி வருகின்றது. இத் திட்டத்திற்கென எமது நலன் புரிச் சங்கம் வருடம் தோறும் £900.00 நிதியுதவி வழங்கி வருகின்றது.

மேலும் கடந்த வருடம் கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு அமைய, நாம் பாடசாலையின் நூலக வளர்ச்சிற்காக சுமார் £900.00 (ரூபாய் 180,000.00) வழங்கி பதினாறு புதிய புத்தக இறாக்கைகள் செய்து வழங்கப்பட்டு கல்லூரியின் நூலகம் தற்போது புத்துயிர் பெற்றுள்ளது.

### யா/யாழ்ற்ரன் கல்லூரி கனிஷ்ட பிரிவு கோவிந்தன் பாடசாலை

தற்போது காரைநகரில் இயங்கி வரும் கனிஷ்ட பிரிவு பாடசாலைகளில் அதி கூடிய எண்ணிக்கையான மாணவர்களைக் (216 மாணவர்கள்) கொண்ட பாடசாலையாக கோவிந்தன் பாடசாலை யாழ்ற்ரன் கல்லூரி அதிபரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் திறம்பட இயங்கி வருகின்றது.

இப் பாடசாலையின் சிறுவர் பூங்கா, மற்றும் சுற்றுச் சூழல் திருத்த வேலைகள், எமது நலன் புரிச் சங்கத்தினால் நிதியுதவியுடன் (£500.00-ரூபாய் 100,000.00) நடைபெற்று வருகின்றது.

இப்பாடசாலையின் மேலதிக அபிவிருத்திக்கு உதவி வழங்க விரும்பும் பழைய மாணவர்கள், அபிமானிகள் கல்லூரி அதிபருடனோ அல்லது எமது சங்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

எமது ஊர் இடம் பெயர்விற்கு பின்னர் இப் பாடசாலை 1996ம் ஆண்டு மீள் திறக்கப்பட்டது. அன்றில் இருந்து இன்றுவரை இப்பாடசாலை இவ்வித தனியார், மற்றும் அமைப்புக்கள் உதவியின்றி இயங்கி வருகின்றது.

## யா/சுந்தரமுர்த்தி நாயனார் வித்தியாசாலை அபிவிருத்திக்குக் கைகொடுப்போம்




யா/சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தின் நிர்மாண வேலைகள் (அரசாங்கத்தால் உதவி பெற முடியாத) யாவும் லண்டன் பழைய மாணவர் சங்கம், அபிமானிகள், நலன்விரும்பிகள் மற்றும் காரை நலன் புரிச் சங்கத்தின் நிதியுதவியுடனும் நடைபெற்று வருகின்றது.

பழைய மாணவர் தாய்ச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க எமது காரை நலன்புரிச் சங்கம் சுமார் £2300.00 (ரூபாய் 450,000.00) நிதியுதவி வழங்கி பாடசாலை ஆரம்ப பிரிவு (ஆலடி பள்ளிக்கூடம்) கட்டிடம் புனரமைக்கப்பட்டு புதிய கட்டிடத்துடன் இணைக்கப்படுள்ளது.

இப் பாடசாலை அபிவிருத்திக்கு மேலும் உதவி செய்ய விரும்பும் பழைய மாணவர்கள், அபிமானிகள், நலன் விரும்பிகள் லண்டன் பழைய மாணவர் சங்கத்துடன் அல்லது காரை நலன் புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## சுப்பிரமணிய வித்தியாசாலை புனரமைப்புக்கு நிதியுதவி

மேற்படி பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க, 5000ம் ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நடைபெற்று, முற்றுப்பெறாத வேலைகளை நிறைவேற்றுவதற்காக, எமது நலன் புரிச் சங்கம் ரூபாய் 100,000.00 (ஒரு இலட்சம்) வழங்கி வேலைகள் நடைபெற்று வருகின்றது.

## கலாநிதி ஆ.தியாகராஜா ஞாபகார்த்த கல்வி ஊக்குவிப்பு அறக்கட்டளை நிதியம்

காரைநகரில் கல்வி பயிலும் க.பொ.த. (சாதாரண தரம்), சக (உயர்தரம்) ஆகிய மாணவ மாணவியர்களுக்கு அவர்களின் கல்வித்



தேவைகளினதும், தகமைகளினதும் அடிப்படையில் வருடா வருடம் நிதயுதவி வழங்கி ஊக்குவிப்பதற்காக, அமரர் கலாநிதி ஆ.தியாகராஜா அவர்களின் ஞாபகார்த்தமாக இவ் அறக்கட்டளை அமைப்பு 16/12/2012 அன்று கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலய சயம்பு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு, ஜனவரியில் 2013 இருந்து இவ் அறக்கட்டளை அமைப்பு உத்தியோகபூர்வமாக இயங்க ப்பட்டுள்ளது.

இந்த நிதியம் வருடம் ஒன்றிற்கு ஒரு மில்லியன் ரூபாய்கள் வரை (1,000,000.00) இக் கல்விச் சேவைக்கென வழங்கவுள்ளது. தனி ஒருவரால் வழங்கப்படும் இந்த நிதியுதவி, பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன், வழங்கப்படும்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர், ஆசிரியர் கௌரவிப்பு விழா

இலண்டன் காரை நலன்புரிச் சங்கம் மற்றும் கனடா காரை கலாசார மன்றம், ஆகியவற்றின் அனுசரனையுடன் காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சையில்



சித்தியடைந்த 17 மாணவர்களுக்கும், தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றும் காரைநகர் மண்ணுக்கு பெருமை தேடித்தந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா 26.12.2012 காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் நடைபெற்றது.

## காரைநகர் மணிவாசகர் சபைக்கு எமது சங்கத்தின் நிதியுதவி

காரைநகர் மணிவாசகர் சபையின் வேண்டுகோளை கருத்தில் எடுத்து எமது பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கம் ரூபாய் 20,000.00 நிதியை வழங்கியது. இந்நிதி மேற்படி சபையினரால் வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் திருவாசக மனனப் போட்டிகள், பேச்சு, பண்ணிசை மற்றும் சமயபாடப் பரிட்சைகள் போன்றவற்றை நடாத்துவதற்காகும்.

காரை மணிவாசகர் சபை தரம் 2 முதல் தரம் 11 வரை இவ்வாறான சைவசமய பரிட்சை போட்டிகளை கடந்த 58 வருட காலங்களுக்கு மேலாக நடாத்தி வருவது குறிபிடத்தக்கது.

இத்துடன் மேலும் இச்சபையின் வேண்டுகோளுக்கு இணங்க எமது சங்கம் ஒவ்வொரு வருடமும் ரூபாய் 35,000.00 நிதியுதவி வழங்கி, இவர்களால் நடாத்தப்படும் "திருவாசகம்" முற்றும் மனம் செய்யும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிற்பதற்கு உதவும்.

இப்படியான நற்பயனுள்ள திட்டங்கள் மூலம் சமய விழிப்புணர்வு சார்ந்த எதிர்கால சந்ததியினரையும், மற்றும் மாணவர்களின் ஞாபகசக்தியையும் விருத்தியடைய செய்யும் என்பதில் ஐயமில்லை.

## முதுசங்களைத் தேடி... “தேடல் பயணம் மீண்டும் ஆரம்பம்”

இம்முறை எமது முதுசமாக காரைநகர் சைவ மகா சபையின் 1967ம் ஆண்டு வெளியிடப்பட்ட பொன் விழா மலர் எமது குடையின் கீழ் மீள் பதிப்பிற்காய் வருகின்றது. 1967ம் ஆண்டு பொன் விழா கண்ட இப்பெரும் சபையின் நூலை மறுபதிப்பு செய்வதில் பெருமகிழ்வு அடைகின்றோம். எமது ஊரில் உருவாக்கப்பட்ட முதல் ஒரு தலையாய சபையின் பொன் விழா மலர் இதுவாகும்.

1915ம் ஆண்டு காரைநகர் சைவப் பெருமக்களால் ஆரம்பிக்கப்பட்டு. தமிழையும் சைவத்தையும் எம் ஊரில் தறிகெட்டு விடாது (ஆங்கிலேயர் ஆட்சியில்) தழைக்க வைக்க பல தொண்டுகள் ஆற்றியது எமது சைவ மகா சபை.

சைவ மகாசபையின் பொன் விழா மலருக்கு ஆசிச் செய்திகள் வழங்கிய 10பேரில் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஈடு இணை அற்றவர்கள். இருந்தும் இவர்களில் குறிப்பிடத்தக்க பெரியவர்கள் , ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி யகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், தருமையாதீனம் 25வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்ரமணிய தேசிக ஞானசம்பந்த பராமச்சாரிய சுவாமிகள், மற்றும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோர் அடங்குவர்.

எனவே எமது சைவ மகாசபையின் பொன் விழா மலரானது காரை மக்கள் ஆகிய எங்கள் ஒவ்வொருவரினதும் கைகளில் தவழவேண்டிய ஒரு நூல் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

தற்பொழுது இந்நூல் மீள்பதிப்பிற்கு உள்ளாகி வருகிறது.

வித்துவான் F .X .C நடராஜா அவர்களின் படைப்பான காரை மான்மியம் இரண்டாம் பதிப்பினைத் முதன் முறையாக ”முதுசங்களை தேடி” எனும் தலைப்பில் பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கமும் , கனடா காரை கலாச்சார மன்றமும் இணைந்து ஆரம்பித்து வைத்த இத்திட்டம் இன்று அனைத்து காரை மன்றங்களையும் ஒன்றிணைத்து ஒரு குடைக்கின் கீழ் கொண்டுவந்துள்ளது.

## வலந்தலை பேருந்து தரிப்பு நிலையம்

காரைநகர் வலந்தலை சந்தியில் எமது சங்கத்தின் நிதி உதவியுடன், காரை அபிவிருத்தி சபையின் (காரைநகர்) முனைநாள் செயலாளர் அமரர் திரு .ஜே. தில்லையம்பலவாணர் ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட பஸ்தரிப்பு நிலையம் தற்பொழுது பொது மக்கள் பாவனையில் உள்ளது.

இத்தரிப்பு நிலையத்தை தொடர்ச்சியாக பராமரிக்கவும், அத்துடன் மேலதிக முற்றுப் பெறாத அபிவிருத்தியையும் கருத்தில் கொண்டு காரைநகர்



பிரதேச சபையினரிடம் கையளிப்பதற்கு காரை அபிவிருத்தி சபை (காரைநகர்) உத்தேசித்து வருகின்றனர். இதன் மூலம், இத்தரிப்பு நிலையதிற்கு மேலதிக வசதிகள் கிடைக்கலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## வன்னி முதன்மைப்பள்ளி ஆசிரியர்களுக்கு நிதியுதவி

பிரித்தானியாவில் இயங்கி வரும் "DEEP" (Development, Education and Empowering of under privilege People) Global எனும் நிறுவனதிற்கு அவர்களின் வேண்டுகோளுக்கு அமைய எமது பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம் £1000.00 (200,000.00)நிதியுதவி வழங்கியது. இந் நிறுவனம்

வன்னிப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களின் முதன்மைப் பள்ளிகளில் பணி புரியும் தொண்டு ஆசிரியர்களின் (Volunteers) அடிப்படைத் தேவைகளுக்காகவும் அவர்களின் கடமை உணர்ச்சியினை ஊக்குவிப்பதற்காகவும் மாதாந்தம் அவர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய் 2000.00 கொடுப்பனவு செய்து வருகின்றது.

நாம் வழங்கிய இந்த சிறுதுளி பணம் ஒரு மாதத்திற்கான ஆசிரியர் கொடுப்பனவுக்கு உபயோகப்பட்டுள்ளது. இதன் மூலம் தொண்டு ஆசிரியர்களாக பணியாற்றும் 72 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளார்கள் என்று இவ் அமைப்பினர் பெருமையுடனும் நன்றியுடனும் தெரிவித்தனர்.

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்இரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு (குறள் 392)

# எம் விழாக்கள்

## தவில் நாதஸ்வர இசை கச்சேரி

பிரித்தானியா காரை நலன் புரிச்சங்கத்தினரால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்த இசைக் கச்சேரியுடன் கூடிய கலைஞர்கள் கௌரவிப்பு வைபவம் 02-09-2012 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. வைபவம் CANNONS HIGH SCHOOL, SHALDON ROAD, HARROW எனும் இடத்தில் அமைந்துள்ள பாடசாலை மண்டபத்தில் 250 க்கும் மேற்பட்ட இசை ரசனை உணர்வு கொண்ட மக்கள் மத்தியில் நடைபெற்றது.

தாயகத்தில் இருந்து வருகை தந்திருந்த எமது காரை மண்ணை சேர்ந்த நாதஸ்வர வித்துவான், ஞானநாத சொரூபி, லயனநாத சொரூபி கணேஷன் பவப்பிரியன் , தவில் மேதை லயனஞான செல்வன் வித்துவான் கணேஷன் செந்தூரன் (இவர்கள் இருவரும் நாதஸ்வர வித்துவான் கலைமாமணி கைலாயகம்பர் கணேஷன் அவர்களின் புதல்வர்கள் ஆவார்கள்), மற்றும் நாதஸ்வர வித்துவான், கானபூபதி நாகதீபன் குமாரதாஸ், வித்துவான் சதீஸ்குமார் சின்னராசா ஆகிய கலைஞர்களை வரவேற்று, கலைஞர்கள் அனைவருக்கும் தங்கப் பதக்கமும் , பொன்னாடையும் போர்த்தி கையில் ரொக்கமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## காரை சங்கம் 2012

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம் முதன்முறையாக முன்னெடுத்த விளையாட்டு



போட்டியுடன் கூடிய ஒன்றுகூடல் 15th July 2102, ROSEHILL RECREATION GROUND ,ROSEHILL , SUTTON எனும் இடத்தில் அமைத்துள்ள திறந்த வெளி மைதானத்தில் வெகு விமர்சையாகவும், கோலாகலமாகவும் நடைபெற்றது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திரு .ஆறுமுகம் நல்லைநாதன் (துணைப் பேராசிரியர்) அவர்களும், கௌரவ விருந்தினராக திரு S.K. சதாசிவம் மாஸ்டர் (இளைப்பாறிய அதிபர்) அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக யோகி ராம் சுந்தர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்கள்.

நிகழ்வில் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், ஓட்டப்போட்டிகள், தடை ஓட்டம் , கயிறு இழுத்தல் என வயது அடிப்படையில் போட்டிகள் சுவாரசியமாகவும், ஆர்வத்துடனும் நடைபெற்றது. 200 இக்கும் மேற்பட்ட இளம் சிறுவர் சிறுமியர் போட்டிகளில் பங்குபற்றினர்.

நிகழ்வில் மற்றொரு புறம் கூழ், கொத்து ரொட்டி, BBQ என்று இன்னும் பல உணவு வகைகள் சுடச் சுட உடனுக்குடன் தயார் செய்து வழங்கியமை மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது.

இறுதி நிகழ்வாக அனைத்து விளையாட்டுக்களிலும் பங்குபற்றி வெற்றி பெற்ற குழு மற்றும் தனிப்பட்ட வெற்றியாலர்களுக்கு பதக்கங்கள் (MEDALS), வெற்றிக்கிண்ணங்கள் (TROPHYS) மற்றும் பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கத்தினரின் சான்றிதள்களும் வழங்கப்பட்டன .

## காரைக் கதம்பம் 2013

காரை நலன்புரிச் சங்கத்தின் 16 வது பொங்கல் விழாவான 2nd of Feburary 2013, PRESTON MANOR HIGH SCHOOL, CARLTON AVENUE EAST, WEMBLEY, எனும் இடத்தில 550க்கும் மேற்பட்ட மக்களுடன் நடைபெற்றது.

கனடா காரை கலாச்சார மன்றம், சுவிஸ் காரை அபிவிருத்தி சபை, காரைநகர் காரை அபிவிருத்தி சபை, பிரதம விருந்தினராக வருகை தர இருந்த Dr

.வீரமங்கை யோகரடணம் ஆகியோர்களது வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டு அவர்களுக்கு நன்றிகளும் பாராட்டுக்களும் கூறப்பட்டிருந்தது.

காரை மாணவர் நூல் நிலையத்துக்கான பெரு வாரியான நூல்களை மக்கள் விழாவில் எடுத்து வந்து நிர்வாகத்தினரிடம் வழங்கியிருந்தார்கள். நிகழ்ச்சியின் இறுதியில் பங்கு பற்றிய அனைத்து குழந்தைகளுக்கும் விழாவிற்கு வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர்களான சான்றிதழ்கள் வழங்கி கௌரவித் திருந்தார்கள்.

இவ் விழாவிற்கு அனுசரணை வழங்கி இருந்த அனைத்து நிறுவனங்களுக்கும் , தனி நபர்களுக்கும் பிரித்தானிய காரை நலன் புரிச் சங்கம் தமது சிரம் தாழ்த்திய நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றது.

## கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தின் 125வது ஆண்டு விழாக் கொண்டாட்டம்

கலாநிதி.ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலத்தின் 125 ஆவது ஆண்டு விழா கொண்டாட்டம் பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் ஞாயிற்றுக் கிழமை, 23rd June அன்று, Winston Churchill Hall இல் மண்டபத்தில் அரங்கம் நிறைந்த பார்வையாளர்களுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவின் பிரதம விருந்தினர்களாக ஓய்வு பெற்ற ஆசிரியை புலவர் திருமதி பூரணம் ஏனாதிநாதன், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் ஸ்தாபகர் பெரியார் முத்து சயம்பு ஐயா அவர்களின் பூட்டன் பூட்டி திரு, திருமதி G .ரமேஷ், மேலும் கல்லூரியை மூன்று சகாப்தங்களுக்கு மேல் திறம்பட ஆத்மார்த்தமாக வழிநடத்திய கலாநிதி ஆ.தியாகராஜா அவர்களின் புதல்வியும் பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் பிதாமகன் கலாநிதி சபாபதி சபாரட்ணம் அவர்களின் மனைவியுமான திருமதி மங்கை சபாரட்ணம், பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் தலைவருமாகிய திரு.அ. செல்வச்சந்திரன் (நேரு மாஸ்ரர்), திருமதி. செல்வநாயகி துரைராஜ



சிங்கம், திரு. இளையதம்பி தயானாந்தா, பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையின் சார்பில் உப-பொருளாளர் திரு. ந. பிரகலாதீஸ்வரன், கணக்காய்வாளர் திரு. கந்தப்பு அம்பலவாணர் அவர்களும், ஓய்வு பெற்ற ஆசிரிய, ஆசிரியைகள், மற்றும் அவர்களுது உறவினர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் நிகழ்வுகள்" கரிஷ் மெலோடிஸ் இன்னிசை குழுவினரின்" இதமான மெல்லிசைப் பாடல், "பழைய மாணவர்கள் தாயகக் கல்வியில் நன்றி மறந்தவர்களா? இல்லையா?" என்னும் பொருளில் நடைபெற்ற பட்டி மன்றம், மற்றும் காரை வைரஸ் நடனக் குழுவினரின் நாட்டிய நாடகமும் சபையோரின் வரவேற்பைப் பெற்றிருந்தது.

## பிரித்தானியா காரை நலன்புரிச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் 2013

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் 2013 ம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் (AGM ) 22nd Sep 2013 இன்று HARROW COUNCIL CHAMBER HALL, STATION ROAD, HA1 2UX, எனும் இடத்தில அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்றவுள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் பிரித்தானியா காரை நலன் புரிச் சங்கத்தினர்.

*President:*
**Mr P Thavarajah 07951 950843**

*Secretary:*
**Mr S.Sivapathasuntharam 01908 558976**

*Treasurer:*
**Mr N Ravindran 020 8949 3226**

**KARAI WELFARE SOCIETY(UK)**
127 Cassiobury Drive,
Watford,
Herts
WD17 3AH,
UK
Tel : 01923 226000,
Fax : 01923 238289
www.karainagar.org